செ.வெ.எண்: 40 நாள்: 17.11.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் நிலப்பட்டா தொடர்பான பிரச்சனைகளுகளுக்கு தீர்வு காணும் வகையில் கிராம அளவில் நடைபெறும் சிறப்பு முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் நிலப்பட்டா தொடர்பான பிரச்சனைகளுகளுக்கு தீர்வு காணும் வகையில் கிராம அளவில் நடைபெறும் சிறப்பு முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழக அரசின் ஆணைப்படி கணினி ‘அ பதிவேடு’ கணினி சிட்டாவில் பெயர் திருத்தம், உறவுமுறை திருத்தம், நிலத்தின் உரிமையாளர் பெயர் திருத்தம் போன்றவைகளை திருத்தம் செய்வது குறித்து விவசாயிகளின் நிலப்பட்டா பிரச்சனை தொடர்பான சிறப்பு முகாம் இன்று கீழ்வேளூர் வட்டத்தில் வடகரை, கோகூர், ஆந்தக்குடி ஆகிய கிராமங்களுக்கு கோகூர் இ.சேவை மையத்திலும், வேதாரண்யம் வட்டத்தில் ஆயக்காரன்புலம்-4, ஆயக்காரன்புலம்-3, பன்னாள் ஆகிய கிராமங்களுக்கு ஆயக்காரன்புலம் நூலக கட்டிடத்திலும், திருக்குவளை வட்டத்தில் வாழக்கரை, மீனம்பநல்லூர் கிராமங்களுக்கு வாழக்கரை இ.சேவை மையத்திலும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நாகப்பட்டினம் வட்டத்தில் சியாத்தமங்கை, கட்டுமாவடி, எரவாஞ்சேரி, அருண்மொழிதேவன், துறையூர் ஆகிய கிராமங்களுக்கு திட்டச்சேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இன்று நடைபெற்ற சிறப்பு முகாம்களில் இதுவரை நாகப்பட்டினம் வட்டத்தில் 15 மனுக்கள் வரப்பெற்று 8 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு அவற்றில் 3 மனுக்களுக்கு நத்தம் பட்டாவினையும், 5 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு, மீதமுள்ள 7 மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டுவருகிறது. கீழ்வேளூர் வட்டத்தில் 24 மனுக்கள் வரப்பெற்று அவற்றில் 5 மனுக்களுக்கு உடனடி தீர்வு

காணப்பட்டு, மீதமுள்ள 19 மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து வேதாரண்யம் வட்டத்தில் 21 மனுக்கள் வரப்பெற்று அனைத்து மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டது. திருக்குவளை வட்டத்தில் 8 மனுக்கள் வரப்பெற்று அவற்றில் 7 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு 1 மனு மட்டும் நிலுவையில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

முன்னதாக நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் பாப்பாகோவில் ஊராட்சி சமத்துவபுரத்தில் உள்ள பழுதடைந்த வீடுகளை பார்வையிட்டு, சமத்துவபுரம் தெருவில் உள்ள சாலைகளில் மழை நீர் தேங்காதவாறு உயர்த்தவும், சாய்பாபா வாய்க்காலில் பாப்பாகோவில் பிரிவு மழைநீர் வடிகாலில் ஆக்கிரமிப்புகள் மற்றும் ஆகாயதாமரைகளை அகற்றவும், நரியங்குடி ஓடம்போக்கி ஆற்றின் கரைகளை உயர்த்தவும், கடுவையாற்றின் கரைகளை உயர்த்தி மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றி சீரமைப்பது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின்போது நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இரா.மணிவேலன் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.தனபால் அவர்கள், வட்டாட்சியர் திரு.ஜெயபால் அவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், மண்டல துணை வட்டாட்சியர்கள், சரக வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**